உ
சிவமயம்



அளவெட்டி வடக்கு, அளவெட்டியை பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் 8ம் வாய்க்காலை வசிப்பிடமாகவும் கொண்ட C.T.B பஸ் நடத்துனர் என்று அழைக்கப்படும்

# அமரர் நாகமணி குணரத்தினம்

அவர்களின் நினைவு சுமந்து வெளியாகும்

# நினைவு மலர்

17.08.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ. தமயந்தி



அளவெட்டி வடக்கு அளவெட்டியை
பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் 8ம் வாய்காலை
வசிப்பிடமாகவும் கொண்ட *C.T.B* பஸ் நடத்துனர்
என்று அழைக்கப்படும்

அமரர்

# நாகமணி குணரத்தினம்

நினைவு சுமந்த வெளியாகும்

# நினைவு மலர்

## 17-08-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் –வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அமரர்

# நாகமணி குணரத்தினம் அவர்கள்

திதி வெண்பா

ஆண்டு நந்தனவருடம் ஆடித் திங்கள் முதல்நாளாம்
பூண்ட வளர்பிறை மூல நிறை ஆயிலிய நட்சத்திரத்தில்
நீண்ட புகழ் எங்கள் குடும்ப விளக்கு குணரத்தினம்
இப் பூவுலகை விட்டு மீண்ட நாள் காணன்.....

தோற்றம்
1939.08.17

மறைவு
2012.07.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மை வளர்த்து
எமது வாழ்வில் வழிகாட்டியாக
இருந்து எமது இலக்குகளை
அடைய உறுதியாக
இறுதிவரையும் தங்களை
அர்ப்பணித்து இன்று எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறை
கழல் அடைந்த எமது அன்புத்
தெய்வத்துக்கு இம்மலர்த்
தொகுப்பை சமர்ப்பிக்கின்றோம்

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தோத்திரப் பாக்கள்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்


மற்றுப் பெற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனி னிப்பிற
வாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
ஊரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடமை யெல்லாமும்
குன்றே அணையாய் யென்னை யாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே

### திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருபல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைத்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலி செய் கிற்பாம்

## திருப்புகழ்

உம்பர் தரு தேருமணி கசிவாகி
ஒன்கடலுள் தேன் அமுதத்துணர் வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத்தனை வோனே
தந்தை வலத் தாலருள்கை கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை வரலாறு

இந்து மா கடலின் எழில் முத்தாய் திகழ்கின்ற இலங்கை திருநாட்டின் வட புலத்தே யாழ்ப்பாணக் குடா நாட்டில் கல்விப் புலமையாளர்கள், வரலாற்றுப்புகழ் கொண்ட ஆலயங்கள் பண் இசை விற்பனர்கள் நிறைந்த அளவெட்டி ஊரிலே வீரசைவ குலமாம் நாகமணி செல்லம்மா அவர்களின் கனிஸ்ட புத்திரனாக 1939.08.17. திகதி அன்று பிறந்தார்.

அமரர்கள் ஆகிவிட்ட திருநாவுக்கரசு சுந்தரமூர்த்தி,திருவாதவூரர் சிவப்பிரகாசம், பாலசிங்கம் பாலசுப்பிரமணியம் தனலட்சுமி-இராஜசிங்கம், ஆகியோருடன் உடன் பிறப்புக்களாக பிறந்து வாழ்ந்து வந்தார்.தன் தாயை மூன்று வயதிலே இழந்து உடன் பிறப்புக்களின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ்./ ஞானோதயா வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ்./அருணோதயா கல்லூரியிலும் கல்வி கற்று தன் மாணவப் பருவத்திலேயே கிளித்தட்டு விளையாட்டுக்களிலும் பங்கு கொண்டு பல வெற்றி பெற்று பாராட்டுக்களும் பரிசில்களும் பெற்றார். தன் சிறுவயதிலிருந்தே தந்தையாருடன் விவசாயத்திலும் ஈடுபட்டு வந்தார்.


மணப்பருவம் அவரை நெருங்க கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் பகுதியிலே வாழ்ந்து வந்த நாகலிங்கம்- நல்லம்மாவின் மகள் அன்னலட்சுமியை 1965ஆம் ஆண்டு 02ஆம் மாதம் தன் வாழ்க்கைத் துணையாக இணைத்துக் கொண்டார். இவ்வாறு அவர்கள் குடும்பமாக குதூகலத்துடன் வாழ்ந்து வரும் காலமதில் புத்திர செல்வங்களாக நளாயினி, குணாளினி,வாகீசன்(கொலண்ட்),கேதீசன்(முகாமைத்துவ உதவியாளர்) சுதாயினி,திவாயினி(உப தபால் அதிபர்) ஆகியோரை பெற்றெடுத்தார்.குடும்ப சுமையென்ற துயர் போக்க இலங்கை போக்குவரத்து சபையில் பணி ஆற்றி வந்தார்.காலங்கள் உருண்டோட 1975ம் ஆண்டு தனது 36 அகவையிலே தன் தந்தையையும் இழந்து நின்றார். பிள்ளைகளின் கல்விக்காக அவர்களை உரிய காலத்தில் கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலே சேர்த்துக் கொண்டார்.தந்தையின் பெயர் துலங்க வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்ற அவர்கள் கல்வியிலும்,விளையாட்டிலும் சிறந்து விளங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கிராமம் நற்பெயர் காக்க வேண்டும் என்ற அக நினைவுடன் விளையாட்டுக்கழகம் சன சமூகநிலையம் ,கிராம அபிவிருத்திச்சங்கம் போன்ற அமைப்புக்களில்அங்கம் வகித்து கிராமத்தின் நற்பெயரை காத்து வந்தார்.

1986 தனிலே தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற காலமது தொட்டு கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் கிளித்தட்டுபயிற்றுவிப்பாளராக சேவை செய்து கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி கிளித்தட்டில் வெற்றி பெற்று பெயர் விளங்க சேவை செய்தார். பிள்ளைகளின் வாழ்க்கை பருவத்தில் அவர்களின் வாழ்க்கை துணைகளாக சிறிகாந்தன்-கோபாலகிருஸ்ணன், சாராதா(கொலண்ட்) புனிதா, சத்தியசீலன்.விஜிந்தனன்,ஆகியோரின் மருமக்களை தேடிக்கொண்டார். இவர்களின் குடும்ப வாழ்க்கை சிறப்பெய்ய அதன் பயனாக துசானி,விஜீத், தமிழ்ச்சுடர், துர்சனா,மதுசாந், மதிவதனன், தமயந்தி, (நிவேதா,நிதர்சனா, சினேகா,(கொலண்ட்),துசியா, லவன்யா, இசைமலர் ,சத்தியசுதாகரன், அமரர் சத்திய பிரசாந் ,சத்திய பிரசாந்தன், சத்தியநருயன், பிறைமொழி, பிரியங்கா,பகிஸன் ஆகிய பேரக் குழந்தைகளைக் கண்டு அரவணைத்து கூடி மகிழ்ந்தார்.இவ்வாறு தன் சுற்றம் சூழ வாழ்ந்து வரும் காலமதில் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".என்ற பொய்யாமொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க எம் குடும்ப குலவிளக்கு 2012.07.21.ஆம் திகதி அன்று ஆயிலிய நட்சத்திரத் திதியிலே இறைவனோடு ஐக்கியம் ஆனார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்பின் உறைவிடமாய்
கண்ணின் மிகு கணவராய்
வாழ்ந்திட்ட என்னவரே
எங்கு சென்றீர் என்னை விட்டு
47 வருடங்களாக குடும்பத்தின்
குலவிளக்காகதிகழ்ந்தவரே....
பிள்ளைகளை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்.

குடும்பமெனும் கோயிலில் தெய்வமாக
விழங்கிய கணவர் நீங்கள்
ஆறு பிள்ளைகள் பெற்று
பாலூட்டிய தந்தை எனும்
பெருமைக்குரியகணவர் நீங்கள்
உங்கள் மறைவு வாழ்க்கையின் அழியாத நினைவு.

## பிள்ளைகள் புலம்பல்

எமக்கு ஆலமரம் போல நிழல் தந்து
ஒளி விளக்காய் பொறுப்புள்ள தந்தையாய்
பிழைகள் திருத்தியும் பொறுப்புக்கள் உணர்த்தியும்
அவனியில் நன்மக்களாய் வாழ வழிகாட்டினீர்கள்
அறிவுரை தந்தீர்கள்பெருமையுடன் வாழ
எமைப்பேணி வளர்த்தீர்கள். நேர்மையின் உருவமாய்
நீதியின்பால் வழிநடாத்தி கர்வமகற்றிக் கடமையைக்
கண்ணாகக்கொள் என்றீர்கள்.
தந்தையே ஆண்டவன் அடியில் தங்கரம்
ஆத்மா சாந்திபெறபிராத்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை பிரிந்த
# துயரின் தவிப்பு.

சைவ வேளான் குலத்தவராகிய
நாகமணி செல்லம்மா
இல்லற வாழ்க்கையின் பயனாக
வந்துதித்த அளவில்லா பாசமுள்ள அப்பாவே
பிள்ளைச் செல்வங்களுக்காக
அரும்பாடுபட்டு உழைத்தீர்களே
தங்களது பிரிவை எம்மால் மறக்கமுடியாதப்பா

பாலூட்டும் தாயின் பாலின்றி
தங்களது இரத்தம் சிந்தி அல்லும் பகலும்
உழைத்து எங்களுக்கு பாலூட்டிய அப்பாவே
ஆறு பிள்ளைகளையும் முறையே
வளர்த்து ஆளாக்கிய தெய்வமே
தங்களது நினைவும் மறைவும்
எம்மை விட்டு விலக மறுக்குதப்பா

**வெளிநாட்டில் உள்ள**
**மகன்**
**கு. வாகீசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ஷதீபப் பாடல்கள்

(சீவாத்மாவாகிய சோதி பரமாத்தாவாகிய சோதியுடன் கலக்கின்றது என்பதை குறிக்கோளாக கொண்டு நெய்த்தீபம் ஏந்தி அத்தீபத்தை ஆலயத்திற்கு சேர்க்கும் போது பாடப்பட்டது)

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னை நீ இகழவேவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லையம் பலத்தாடுகின்ற
அத்தாவுடன் ஆடல் காண்பான் அடினேன் வந்தவாறே

## சீடன்

மாட்சிசேர் கைலை வாழும்
மாமறைச் சிவனே வந்து
சாட்சியாய் குருவியாய் லிங்க
சங்கமன் தானே யாகும்
தாழச்சியொன் றில்லா வீர
சமயமெய் முத்தி பெற்ற
மோட்ச தீபத்தின் செய்தி
முறையாய் உரைசெய்வோமே

## குரு

ஆரடா? டிருள் லிங்கே
அருள்புரி பெரிய செம்பொன்
சீர்பெறு ஞான வாயில்
திகழ் கயிலாயம் வந்தே
பேர்பெறு பாச மென்னும்
பெரிய நற் கபடாமுன்பு
நீரினிவந்த செய்தி
நேர்மையா யுரைசெய்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீடன்**

வேதன் மால் தேடிக்காணா
விண்ணவர்க் கரசே உன்றன்
பாதமே போற்றி செய்யப்
போதகப்பொருளே!யான் செய்
பிழை பொறுத்தருள் புரிந்து
பாதகமனைத்தும் தீர்த்துப்
பரகதி யருளு வாயே

**குரு**

அருளுவா யென்று கூறும்
அப்பனே யறையக் கேளாய்
பொருள்களோடன்றி மற்றும்
பூஷண வகைகள் கொண்டு
இருளறை யெதிரே வந்திங்
கினையடி தன்னைப் போற்றி
அருள் பெற வந்த செய்தி
அடைவுடனுரைசெய்வாயே

**சீடன்**

துன்னுகல் லெறியும் வில்லின்
அடியொடு உரையுமன்பால்
மன்னிட ஏற்ற ஆண்ட
மாண்பினை யடிமை யெண்ணி
மன்னவர் விண்ணோர் போற்றும்
மலையக வாசல் நிற்கும்
என்னை நின்பத நிழற்கீழ்
இருத்தி யாட் கொள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு**

ஆ ளென்று சொல்லு கின்ற
அன்பனே அகமகிழ்ந்தேன்
சூழ்கின்ற நின்து மாயத்
தொடரறுத் தடிமை கொள்ள
வாள் கொண்ட நந்தி போற்றும்
வானுயர் கபாடந் தன்னில்
தாள் வின்றி வெண்ணை வாங்கித்
தமையுடன் வீசு வாயே

**சீடன்**

வீசுவாய் வெணணெ யென்று
விமலனா ருரைத்த போது
பாசமப யைக எறுத்துப்
பாதமலர் அடைய வந்தேன்
நேசமா யாடிப் பாடி
நெறியுடன் வெண்ணெய் வாங்கி
அன்புடன் வீசினேன்

**சிவம்**

வந்து முன்னிற்கு மன்பன்
வருந்திடா வண்ண மின்னே
நந்திநீ சென்று கண்டு
நன்மொழி பலவியம்பி
மைந்தனே!மனவரங் கேள்
வருகவென வரவழைத்துக் கொண்டு
சிந்தை யார்வத்தி னோடென்
திருப்பத மடைவிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீடன்

எறிந்தனன் ஈசா! அன்பால்
ஏத்துவார் ஒத்தி சார்தல்
அறிந்துநற் பிரணாலிங்க
பூசனையன் போடாற்றிப்
பிறிதொரு பொருளுரு மெண்ணாப்
பேரின்ப வாழ்வின் மூழ்கி
செறிந்து வந்தடைந் தேனுன்றன்
திருவடி நல்குவாயே

**வேறு**

என்று நற்புதல்வன் கூறி
இறையவன் மனமகிழ்ந்து
நன்றென நகைத்தென்பாதம்
நாமுமக் களிப்போ மென்று
குன்றினிக் கணத்தை நோக்கிக்
கூட்டி வாவென்று கூற
சென்றவா வரவழைத்துச்
சிவபத முய்ப்பித்தாரே

**சிவன்**

உய்த்தலு முமையோர் பாகன்
உகந்தவடியவன் நோக்கி
எத்தனை குற்ற மேனு
மெனதடி யவர்கள் செய்யின்
அத்தகு குற்ற மெல்லா
மன்பெனும் மலரே யாகும்
சித்தநீ வருந்தல் வேண்டாம்
திருப்பதம் நல்கினேனே.

சரணம் (சீடன்)

ஆராதனை செய்யடியார் சரணம்
அருள் சேர்முக மாறுடையாய் சரணம்
பாரோர் புகழும் பரனே சரணம்
பவதக்கன் வீழ்படையாய் சரணம்
தீராதிரு நேத்திரனே சரணம்
சிவ ரங்கமாகள் தேவா சரணம்
வீராசம நூல் வீஜயா சரணம்
வீரேசுரனே சரணம்! சரணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அறம்செயவிரும்பு

நற்கருமங்களைச் செய்வதற்கு ஆசை கொள்ளவேண்டும்.

02. ஆறுவது சினம்

தணிய வேண்டியது கோபமேயாகும்.

03. இயல்வது கரவேல்

நம்மால் முடிந்ததை ஒளியாமல் செய்ய வேண்டும்.

04. ஈவது விலக்கேல்

பிறருக்கு கொடுப்பதை தடுத்தலாகது.

05. உடையது விளம்பேல்

நம் திறமைகளை வெளி சொல்லக் கூடாது.

06. ஊக்கமது கைவிடேல்

ஒரு காரியம் செய்யும் போது தடை ஏற்படுமானால் அது கண்டு உற்சாகம் குன்றி விடலாகாது.

07. எண் எழுத்து இகழேல்

கணிதம், இலக்கியம் இவற்றை இழந்து ஒதுக்குதல் ஆகாது.

08. ஏற்பது இகழ்ச்சி

பிறரிடம் யாசிப்பது இழிவு தருவதாகும்.

09. ஐயம் இட்டு உண்

பிச்சையிட்டுப் பின்னர் உண்ணுதல் வேண்டும்.

10. ஒப்புரவு ஒழுகு

உலகத்தின் போக்கு எப்படி என்று அறிந்து:அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

11. ஓதுவது ஒழியேல்

எக்காரணத்தை கொண்டும் படிப்பதை விட்டு விடலாகாது.

12. ஒளவியம் பேசேல்

பொறாமை வார்த்தை பேசுவது கூடாது.

13. அஃகஞ் சுருக்கேல்

அளவைக்குறைத்து தானிய வியாபாரம் செய்தலாகாது.

14. கண்டு ஒன்று சொல்லேல்

கண்ணால் கண்டதற்கு மாறாக எதுவும் கூறாதே கண்டபடியே சொல்வாயாக.

15. ஙப்போல் வளை

"ங" எனும் எழுத்தைப்போன்று அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டும்.

16. சனி நீராடு

சனிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்து தலை முழுக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஞயம்பட உரை

இனிமையாக பேசுதல் வேண்டும்.

18. இடம்பட வீடு எடேல்

தேவைக்கு அதிகமான இடம் வெறுமையாகக் கிடக்கும்படி கட்டாதே.

19. இணக்கம் அறிந்து இணங்கு

ஒருவர் நல்ல குணமுடையவர் தானா என்பதை அறிந்து அதன் பின்னர்அவருடன் நட்பு கொள்ள வேண்டும்.

20. தந்தை தாய் பேண்

தாய் தந்தையரை அன்புடன் ஆதரிக்க வேண்டும்.

21. நன்றி மறவேல்

ஒருவர் செய்த நன்மையை மறந்து விடலாகாது.

22. மன்று பறித்து உண்ணேல்

பிறர் நிலத்தை அபகரித்துசீவனம் பண்ணாதே.

23. பருவத்தே பயிர் செய்

உரிய காலம் அறிந்து காரியம் செய்ய வேண்டும்.

24. இயல்பலாதன செயேல்

தருமத்திற்குமாறுபட்ட காரியங்களை செய்தல் கூடாது.

25. அரவம் ஆடேல்

பாம்புடன் விளையாடுதல் கூடாது.

26. இலவம் பஞ்சில் துயில்

இலவம் பஞசினால் செய்த மெத்தையில் நீ நித்திரை கொள்.

27. வஞ்சகம் பேசேல்

கபடமாக வார்த்தை பேசுதலாகாது.

28. அழகு அலாதன செயேல்

துன்பம் வந்த காலத்தும் இழி செயல் புரிதல் கூடாது.

29 இளமையில் கல்

இளமையிலேயே நீ கற்றுக்கொள்ள படிக்க வேண்டும்.

30. அரனை மறவேல்

கடவுளை மறக்கக் கூடாது.

31. அனைந்தல் ஆடேல்

கடலில் நீந்தி விளையாடக் கூடாது.

32. கடிவது மற

கோபம் உண்டாக்கும் வார்த்தைகளை மறந்து விட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. காப்பது விரதம்

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் காப்பதே நோன்பு.

34. கிழமைப் படவாழ்

உடலும் பொருளும் பிறர்க்கே உரிமைப்படும் படி வாழ வேண்டும்.

35. கீழ்மை அகற்று

இழிவான செயல்களை நீக்க வேண்டும்.

36. குணமது கை விடேல்

நீ விட்டு விடாதே நல்ல குணங்களை விட்டு விட்டுலாகாது.

37. கூடிப் பிரியேல்

நல்லவருடன் சினேகம் செய்து,பிறகு,அவரை விட்டு நீங்குதல் கூடாது.

38. கெடுப்பது ஒழி

பிறருக்கு கெடுதல் செய்வதை விட்டு விட வேண்டும்.

39. கேள்வி முயல்

கற்றவர் கூறுவனவற்றை கேட்பதற்கு நீ முயற்சி செய்.

40. கைவினை கரவேல்

உனக்குத் தெரிந்த கைத் தொழிலைப் பிறருக்கு ஒழிக்காதே.

41. கொள்ளை விரும்பேல்

பிறர் பொருளைக் கொள்ளையிட ஒருபோதும் விரும்புதலாகாது.

42. கோதோட்டு ஒழி

குற்றமுள்ள விளையாடல்களில் ஈடுபடலாகாது.

43. சக்கர நெறி நில்

அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நடக்க வேண்டும்.

44. சான்றோர் இனத்திரு

எப்போதும் இரு அறிஞர்கள் நிறைந்த கூட்டத்தில் கலந்து கொள்வாயாக.

45. சித்திரம் பேசேல்

பொய்மையை மெய்போல் சித்திர்த்துப் பேசுதலாகாது.

46. சீர்மை மறவேல்

புகளுக்கு காரணமானவர்களை மறந்து நடத்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. **களிக்கச் சொல்லேல்**

கேட்பவர் முகம் களிக்கும்படி நீ பேசுதல் கூடாது.

48. **சூது விரும்பேல்**

சூதாடுதலை ஒருபோதும் விரும்பலாகாது.

49. **செய்வன திருந்தச் செய்**

செய்யும் காரியங்களை திருத்தமாக செய்ய வேண்டும்.

50. **சேரிடம் அறிந்து சேர்**

நன்மையடையத் தகும் இடத்தைத் தெரிந்து அங்கு சேர்

51. **சை எனத் திரியேல்**

பலரும் சீ எனத் வெறுக்கும்படி துட்டனாய் திரியலாகாது.

52. **சொல் சோர்வு படேல்**

மற்றவருடன பேசும் போது உற்சாகம் குன்றி சோர்வுடன் பேசுதல் ஆகாது.

53. **சோம்பித் திரியேல்**

முயற்சி செய்யாது சோம்பல் கொண்டு வீணாகத் திரியாதே.

54. **தக்கேன் எனத் திரி**

தகுதியுடையவன் என்று எல்லோரும் புகளும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

55. **தானமது விரும்பு**

தானம் செய்ய விருப்பம் கொள்ள வேண்டும்.

56. **திருமாலுக்கு அடிமை செய**

திருமாலுக்குத் தொண்டு செய்வாயாக.

57. **தீவினை அகற்று**

பாவச் செயல்களை நீக்கி விடல் வேண்டும்.

58. **துன்பத்திற்கு இடம் கொடேல்**

முயற்சியினால் வரும் துன்பத்திற்கு இடம் கொடுக்காது மீண்டும் முயல்வாயாக.

59. **துக்கி வினை செய்**

நன்றாக யோசித்து அதன் பிறகே ஒரு காரியத்தை செய்ய வேண்டும்.

60. **தெய்வம் இகழேல்**

கடவுளை இகழக்கூடாது.

61. **தேசத்தோடு ஒத்துவாழ்**

தேசத்து மக்களுடன் ஒத்து வாழ வேண்டும்.

62. **தையல் சொல் கேள்**

மனைவியின் இழிந்த சொற் கேட்டு நடவாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. தொன்மை மறவேல்

பழமையை மறந்து விடலாகாது

64. தோற்பன தொடரே

தோல்வி தரும் செயல்களில் மீண்டும் ஈடுபடலாகாது.

65. நன்மை கடைப்பிடி

நல்ல காரியம் செய்தலையே, உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும்.

66. நாடு ஒப்பன செய்

நாட்டில் உள்ளவர் பலரும் ஒத்துக் கொள்ளக் கூடிய நல்ல காரியங்களை செய்ய வேண்டும்.

67. நிலையில் பிரியேல்

இருக்கும் உயர் நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்கி விடலாகாது.

68. நீர்விளை யாடேல்-

வெள்ளத்தில் நீந்தி விளையாடக்கூடாது.

69. நுன்மை நுகரேல்

நோய் தரும் உணவுகளை உட்கொள்ளக் கூடாது.

70. நூல் பல கல்

அறிவு வளர்ச்சிக்கான நுல்கள் பலவற்றையும் விடாது கற்பாயாக.

71. நெற் பயிர் விளை

நெல்லுக்குப் பயிரை சாகுபடி செய்ய வேண்டும்.

72. நேர்பட ஒழுகு

நேர்மையாக நடந்து கொள்.

73. நைவினை நணுலே்

ஒருவரைக் கெடுக்கும் செயல்கள் பக்கம் ஒருபோதும் செல்லாதே.

74. நொய்ய உரையேல்

பயன் அற்ற வார்த்தைகளை பேசுதலாகாது.

75. நோய்க்கு இடம் கொடேல்

வியாதி உண்டாக இடம் கொடுகக் கூடாது.

76. பழிப்பன பகரேல்

பிறர் பழிக்கும் இழி சொற்களை கூறுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. பாம்பொடு பழகேல்

பாம்புடன் பழகுதல் கூடாது.

78. பிழைபடச் சொல்லேல்

குற்றம் தோன்றப் பேசுதல் கூடாது.

79. பீடு பெற நில்

பெருமை பெறத்தக்க வழியிலே நிறற்க வேண்டும்.

80. புகழ்தாரைப் போற்றி வாழ்-

உலகம் புகழும் பெரியவர்களைப் போற்றி அதன் படி வாழ வேண்டும்.

81. பூமி திருத்தி உண்

பூமியை சீர் திருத்திப் பயிர் செய்து உண்ண வேண்டும்.

82. பெரியாரை துனை கொள்

பெரியவர்களை உனக்கு துணையாகக் கொள்ள வேண்டும்.

83. பேதமை அகற்று

அறியாமையை போக்க வேண்டும்.

84. பையலோடு இணங்கேல்

அறிவிலிகளான சிறுவர்களுடன் சேரலாகாது.

85. பொருள் தனைப் போற்றி வாழ்

பொருளை வீண் செலவு செய்யாமல் பாதுகாக்க வேண்டும்.

86. போர்த் தொழில் புரியேல்

வீணாக சண்டை சச்சரவுகள் செய்யாதே.

87. மனம் தடுமாறேல்

எது கண்டும் தடுமாறுதல் கூடாது.

88. மாற்றானுக்கு இடம் கொடேல்

பகைவனுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

89. மிகைபடச் சொல்லேல்

அளவுக்கு மீறி, எதையும் கூறுதல் ஆகாது.

90. மீதுண் விரும்பேல்

அதிகமாக உண்ண ஆசைப்படாதே.

91. முனை முகத்து நில்லேல்

போர் முனையிலேயே ஆயுதம் இன்றி நில்லாதே.

92. மூர்க்கரோடு இணங்கேல்

மூர்க்களுடன் சிநேகிதம் கொள்ளாதே.

93. மெல்லினல்லாள் தோள் சேர்

மனைவியுடன் இன்பமாக சேர்ந்து வாழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. **மேன் மக்கள் சொல் கேள்**

நல்லொழுக்கமுடைய பெரியோர்கள் புத்திமதிகளை கேட்க வேண்டும்.

95. **மை விழியார் மனை அகல்**

விலை மாதர் வீட்டுவழி ஒருபோதும் போகாதே.

96. **மொழிவது அற மொழி**

சொல்வதை ஐயம்,திரிபு, அறச் சொல்ல வேண்டும்.

97. **மோகத்தை முனி**

ஆசையை கோபித்து விரட்டிவிட வேண்டும்.

98. **வல்லமை பேசேல்**

சுய சாமர்த்தியத்தைப் பெரிதாகப் பேசலாகாது.

99. **வாது முற்கூறல்**

வீண் விவாதங்களுக்கு முற்ப்பட்டு பிறரை அழைக்கலாகாது.

100. **வித்தை விரும்பு**

கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும்.

101. **வீடு பெற நில்**

முத்தி பெறும் வழியிலே ஒழுக வெண்டும்.

102. **உத்தமனாய் இரு**

உத்தமனாக வாழ வேண்டும்.

103. **ஊருடன் கூடி வாழ்**

ஊராருடைய நன்மை தீமைகளில் கலந்து கொண்டு ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

104. **வெட்டெனப் பேசேல்**

ஒருவருடன் கடினமாக பேசலாகாது

105. **வேண்டி வினை செய்யேல்**

வேண்டுமென்றே தீமை செய்யக் கூடாது.

106. **வைகறைத் துயில் எழு**

விடியற்காலத்திலே தூக்கம் விழித்து எழ வேண்டும்.

107. **ஒன்னாரைத் தேறல்**

பகைவர்களை ஒருபோதும் நம்பக் கூடாது.

108. **ஓரம் சொல்லேல்**

ஒரு தலைப்பட்சமாகப் பேசக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
பெற்ற தாயும் தந்தையும் நம் கண்கண்ட கடவுள்களாவர்.
2. ஆலயம் தொழுவது சாலயும் நன்று
கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிகவும்சிறந்தது
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
துணையோடு சேர்ந்த குடும்ப மற்ற வாழவே சிறந்தது.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்
ஈகை செய்யாதவர்களின் பெருஞ்செல்வத்தைத் தீயவர்கள் கவர்ந்து செல்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
உணவைக் குறைவாக அளவாக உண்பது பெண்களுக்கு அழகு தரும்.
6 ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
ஊரைப் பகைத்தால் அடியோடு அழிய நேரிடும்.
7. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
கணிதமும் இலக்கியமும். நம் இரு கண்களைப் போன்றவை ஆகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து
பிறர் குறை கூறாமலே குறிப்புணர்ந்து செயற்படுவோர் தேவாமிர்தத்திற்கு நிகர் ஆனவர்கள்.
9. ஐயம் புகினும் செய்வன செய்
பிச்சை எடுத்தாலும் நல்ல காரியங்களைச் செய்வது தவறேல்.
10 ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
ஒரே கணவனை மணந்து ஒரு வீட்டிலேயே வாசம் செய்ய வேண்டும்.
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
வேதம் ஓதுவதை விட பிராமணர்க்கு மிகச் சிறந்தது ஒழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
பொறாமை வார்த்தை கூறுவது வளர்ச்சிக்கு கேட்டைத் தரும்.
13. அகமும் காசும் சிக்கனத் தேடு
வீண் செலவு செய்யாமல் தானியத்தையும்,பொருளையும் தேட வேண்டும்
14. கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை
பெண்களுக்கு கற்பு என்பது எது என்றால் கணவன் சொல்லுக்கு மாறாக நடவாது இருப்பது ஆகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 காவல் தானே பாவையர்க்கு அழகு
பெண்களுக்கு அழகு எது என்றால் தங்கள் கற்பிலிருந்து வழுவாமல் தங்களை காத்துக் கொள்வது தான்
16 கிட்டாதாயின் வெட்டெனமற
விரும்பிய பொருள் கிடைக்காது என்று தெரியின் அதை உடனே மறப்பது நன்று
17. கீழோராயினும் தாழ உரை
உன்னை விடக் கீழ்ப்பட்டவருடனும் மரியாதையாகப் பேச வேண்டும்
18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
குற்றத்தையே ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் உன்னைச்
சுற்றி சுற்றத்தார் எவருமே இல்லை
19. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
கையில் இருப்பது கூர்மை மிக்க ஆம்பாக இருப்பினும் வீணாக வீரம் பேசுதலாகாது
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
யாரேனும் உனக்குக் கெடுதல் செய்தால் அதை

உடனே மன்னித்து விடுவதே நற்செய்கையாகும்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
வறுமை வந்தாலும் மனம் தளராது இருப்பது செல்வத்தைஉண்டு பண்ணும்
22. கைப்பொருள் தன்னில் மெய்ப் பொருள்
அழிவில்லாத நிலையான பொருள் கல்வியாகும்
23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
அரசாட்சியில் அமர்ந்திருப்பவன் துன்பம் உள்ள இடத்திற்கு சென்று உதவுதல் கடமையாகும்
24. கோள் செவிக்குறளை காற்றுடன் நெருப்பு
கோள் சொல்வதை கேட்பவன் காதிலே ஒருவன் கோள் மூட்டினால் அது காற்றுடன் சேர்ந்த நெருப்புப்போல பற்றிக் கொள்ளும


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. **கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை**
ஒருவர் மீது வீணான பழிச் சொற்களைக் கூறுவது எல்லோருக்கும் பகையை உண்டு பண்ணும்
26. **சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை**
கருத்தடை செய்யாது மனைவியுடன் கூடி வாழ வேண்டும்
27. **சான்றோர் என் கை ஈன்றோட்க அழகு**
பெற்றவளுக்கு அழகு எது என்றால் அவள் பெற்ற மக்களை கல்வியறிவால் நிறைந்தவர் என்று உலகம் சொல்வதே
28. **சிவத்தை பேணில் தவத்திற்கு அழகு**
தவத்திற்கு அழகு சிவத்தை வழிபடுவதே
29. **சீரைத் தேடின் ஏரைத் தேடு**
சிறப்புடன் வாழ விரும்பினால் பயிர்த் தொழிலையே தேட வேண்டும்
30. **சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**
சுற்றத்தவருக்கு அழகு எது என்றால் நன்மையிலும், தீமையிலும் நீங்காது சூழ்ந்திருப்பதே.
31. **சூதும் வாதும் வேதனை செய்யும்**
சூதாடுதலும் வீண் விவாதமும் துன்பத்தையே தரும்
32. **செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்**
ஒருவன் தான் யெய்யும் தவத்தை மறந்து விட்டால் அவனை அறியாமை ஆட்க்கொள்ளும்.
33. **சேமம் புகினும் யாமத்து உறங்கு**
காவல் கூடத்திலே வேலை செய்தபோதிலும் நடுயாமத்திலாவது உறக்கம் செய்

34. **சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**
பொருள் ஒத்து இருந்தால் பிச்சையிட்ட பின்பு சாப்பிடுவாயாக
35. **சொக்கர் என்பவர் அத்தம் பெறுவா**
அறம்,பொருள், இன்பம்,வீடு,என்னும் நான்கிலே ஒன்றாகிய பொருள் இருந்து விட்டால் மற்ற மூன்றும் கிடைக்கும்
36. **சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்**
சோம்பல் உடையவர்கள் வறுமையால் வாடி அலைவர்
37. **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**
தகப்பனாரின் சொல்லுக்கு மேற்பட்ட அறிவுரை எதுவுமில்லை
38. **தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை**
தாயை விடச் சிறந்த வணங்கத்தகுந்த ஆலயம் எதுமில்லை
39. **திரைகடல் ஓடியும் திரவியம்தேடு**
கடல் கடந்து ஓடிச் சென்றாகிலும் பொருள் தேட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. தீராக் கோபம் போராய் முடியும்
நீங்குதடையாத கோபம் சண்டையில் தான் முடியும்

41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
கணவருக்கு துன்பம் வந்த போது மனம் பதையாத பெண்டிர் வயிற்றிலே கட்டிய நெருப்பினை ஒப்பர்.

42. துற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
அவதூறு சொல்லித்திரியும் பெண்டிர் யமனுக்கு ஒப்பாவர்.

43. தெய்வம் சீறின் கைதவம் மாளும்
ஒருவன் கடவுளது கோபத்துக்கு ஆளானால் கை கூடிவந்த தவமும் அழிந்து விடும்.

44. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
வருந்திப் பொருள் தேடாது, இருக்கும் பொருளை அழித்து உண்டால் முடிவில் துன்பம் உண்டாகும்.

45. தையும் மாசியும் வையகத் துறங்கு
தை,மாசி மாதங்களில்லே வைக்கோலால்,வேய்ந்த வீட்டிலே நித்திரை செய்.

46. தொழுதுண் சுவையின் உழுதுண் இனிது
தொண்டு செய்து கிடைக்கும் ஊதியத்தினால் உண்ணும் இன்பத்தை விட உழுது பயிர் செய்து உண்பதே மிக்கு இனிது.

.47. தோழனோடும் ஏழைமை பேசேல்
ஒருவன் தனது தோழனிடம் ஏழ்மையை எடுத்துச் சொல்லக் கூடாது

48. நல் இணக்கம் அல்லது அல்லற்படுத்தும்
நல்ல சிநேகிதம் அல்லாதது துன்பத்தையே தரும்

49. நாடெங்கும் வாழக் கேடோன்றுமில்லை
தேசம் எங்கும் செழித்திருந்தால் எவருக்கும் துன்பமில்லை.

50. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை
நிலையான கல்வி கற்றவன் எவன்
என்றால் சொன்ன சொல் தவறாதவனே ஆவான்.

51. நீரகம் பொருந்திய ஊரகத் திரு
நீர் வளம் மிக்க ஊரிலே நீ குடியிருப்பாயாக.

52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
சிறிய கருமம், ஆயினும் நன்கு யோசித்த பின் செய்வதற்கு முற்படு.

53. நுன் முறை தெரிந்து சீலத்தொழுகு
அற நுலிலே சொல்லப்பட்டிருக்கும் முறைகளை அறிந்து நல்லொழுக்க வழியில் நடப்பாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை
மனம் அறியாத வஞ்சனை எதுவுமே இல்லை.
55. நேரா நோன்பு சீராகாது
மனத்தினால் உடன்படாத நோன்பு சீர் பெற்றது.
56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்
கேட்பவர் மனம் வருந்தும்படியாக அற்பமான வார்த்தைகளை பேசலாகாது
57. நொய்யவர் என்பவர்வெய்யவர் ஆவர்
உரவத்தில் ஒருவர் சிறியவராக காணப்பட்டாலும் செய்யும் காரியத்தில் அவர் பெரியவர்.
58. நோன்பு என்பது கொன்று தின்னாமை
நோன்பு என்பது எது என்றால் ஓர் உயிரையும் கொன்று தின்னாமை. வருத்தமின்றி முடிப்பான்
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
ஒருவன் செய்த பயிரின் விளைச்சலைப் பார்த்தால் போதும் அவன் செய்த பாவ புண்ணியம்தெரிந்து விடும்.
60. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்
பாலோடு கலந்த சோறாயினும் காலம் அறிந்து உண் வேண்டும்.
61. பிறன் மனை புகாமை அறம் எனத் தகும்
உயர்ந்த தருமம் என்பது எது என்றால் பிறர் மனையிலே புகுந்து அவர் மனைவியை கெடுத்துவாழதிருப்பதே.
62. பீரம் பேணில் பாரம் தாங்கும்
தாய்ப்பால் உண்ட வளர்ந்தவன் எப்பேர்ப்பட்டதுமான பாரத்தையும் எற்று வருத்தமின்றி முடிப்பான்
63. புலையும் கொலையும் களவும் தவீர்
புலால் உண்பதையும் கொலையையும், திருடுவதையும், நீ செய்யாது ஒழித்து விடு.
64. ரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
சிறந்த ஒழுக்கம் என்பதை கீழ் மக்களிடம் உண்டாதல் முடியாது.
65. பெற்றோருக்கு இல்லை சுற்றமும் சினமும்
மெய்ஞ்ஞானம் அடையப் பெற்றோருக்கு ச் சுற்றம் என்ற ஆசையோ வெறுப்புமோ,இல்லையாம்.
66. பேதமை என்பதற்கு மாதர்க்கு அணிகலன்
அறிந்தும் அறியாதவர் போல் நடப்பது பெண்களுக்கு அணி
67. பையைச் சென்றால் வையகந் தாங்கும்
நிதானமாகச் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
தீங்குகள் எதுவும் செய்யாது ஒழி எல்லாவற்றையும் தவிர்த்தல் வேண்டும்.

69. போனகம் என்பது தான் உழந்து உண்டல்
உணவு என்று சொல்லப்படுவது எது என்றால் தான் முயன்று சம்பாதித்து உண்பதேயாகும்.

70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
தேவாமிர்தமேயானாலும் விருந்தினருடன் பகிர்ந்து உண்பாயாக

71. மாரி அல்லது காரியம் இல்லை
மழையின்றி உலகிலே எந்தக் காரியமும் நடை பெறாது.

72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை
நல்ல முயற்சிகளுக்கு எல்லாம் பின்னுக்கு பயன் உண்டாகும்.

73. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
தலைவன் இல்லாத நாடும் தலைவன் இல்லாத குடும்பமும் செவ்வை பெறாது.

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
ஒரு பகலின் முன் பாகத்திலே ஒருவருக்கு தீங்கு செய்தால் அப்பகலின் பின்பகுதியில் தனக்கு அத்தீங்கு வந்து நேரிடும்.

75. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
கல்வி அறிவினாலே முதிர்ந்தவர்கள் கூறும் சொற்கள் தேவாமிர்தம் போன்றவை.

76. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
தூக்கத்திற்கு அழகு எது என்றால் இலவம் பஞ்சு மெத்தையிலே படுத்து உறங்குவதே.

77. மேழிச் செல்வம் கோழைபடாது
ஒரு போதும் குறையாது உழுது பயிர் செய்வதால் வரும் செல்வம் சிறுமை அடையாது.

78. மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு
மை தீட்டியரான கண்ணிரான விலை மாதர் வீட்டுப் பக்கம் போகாதே.

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
பெரியோர் சொல்லை மீறி ஒரு காரியம் செய்யதால் அக்காரியம் பயனின்றிக்கெட்டுவிடும்.

80. மோனம் என்பது ஞான வரம்பு
மௌனமே ஞானத்தின் எல்லையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. **வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்து உண்**
செல்வத்தில் சோழனுக்கு ஒப்பாக இருப்பினும் வாழ்வுக்கு தக்க செலவு செய்து கொடுத்து அனுபவி.

82. **வானம் சுருங்கின் தானம் சுருங்கும்**
மழை வளம் குறைந்தால் கொடை செய்வது குறையும்.

83. **விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்**
விருந்தினரை உபசரியாதவர்களிடம் இல்லத்திற்குப் பொருந்திய ஒழுக்கம் இல்லை.

84. **வீரன் கேண்மை கூர் அம்பாகும்**
வீரனது நட்பு, கையிலே கூர்மையான அம்பு இருப்பது போன்றது.

85. **உரவோர் என்கை இரவாது இருத்தல்**
வல்லவர் என்பவர் எவரிடமும் யாசியாது இருப்பவரே.

86. **ஊக்கமது உடைமை ஆக்கத்திற்கு அழகு**
முன்னேறுவதற்கு அழகு எது என்றால் மனம் தளராதிருத்தல்.


87. **வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை**
களங்கமற்ற வெள்ளை மனமுடையவரிடம் வஞ்ச எண்ணமிராது.

88. **வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை**
அரசன் கோபித்தால் ஒருவனுக்கு வேறு துணை இல்லை

89. **வைகல் தோறும் தெய்வம் தொழு**
தினமும் கடவுளை தொழுது வணங்க வேண்டும்.

90. **ஒத்த இடத்து நித்திரை கொள்**
சமமான இடத்தில் படுத்து நித்திரை கொள்ள வேண்டும்.

91. **ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்**
நல்ல நூல்களை
படிக்காதவரிடம்,அறிவும்,நன்னடத்தையும்,காணுதல் இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்கு
அமரர் நா.குணரத்தினம் அவர்கள் நோய்
வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்தபோது
அவரை நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறியவர்
களுக்கும்,பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும், பின்னர்
அவர் இறந்தபோது அவரது மரணச் செய்தி கேட்டு நேரில்
வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு உதவிகள்
புரிந்தவர்களுக்கும், அவரது உடலை வைத்தியசாலையிலிருந்து
எமது இல்லத்திற்கு எடுத்து வர பல்வேறுவழிகளிலும் உதவி
புரிந்தவர்களுக்கும்,தொலைபேசி மூலம் இரங்கல்தெரிவித்தவர்கள்
மற்றும் இறுதிக் கிரிகைகளில் பங்கு கொண்டவர்கள் கண்ணீர்
அஞ்சலி அச்சிட்டுவெளியிட்டவர்கள்,இறுதி ஊர்வலத்தில்பங்கு
கொண்டவர்கள், இறுதி கிரிகை வழிபாடு மேற்க்கொண்ட
குருமார்கள் ஓதுவாமூர்த்திகள் இசைமுழங்கியவர்கள்,
தொடராக நின்று நிகழ்வில் பங்குகொண்டவர்கள்
உதவிக்கரம் நீட்டிய உள்நாட்டு,வெளிநாட்டு
உற்றார்,உறவினர்கள்,அன்பர்கள்,மற்றும்
மோட்ச தீப கிரிகைகளில் பங்கு
கொண்டவர்கள் அனைவருக்கும்
எமது நன்றிகளைதெரிவித்துக
கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

நாகமணி + செல்லம்மா

*திருநாவுக்கரசு + *சின்னம்மா
*சுந்தரமூர்த்தி + *பிள்ளையம்மா
*திருவாதவூரர் + நவமணி
*சிவப்பிரகாசம் + *கோணேஸ்வரி
*பாலசிங்கம் + *தங்கராணி
*பாலசுப்ரமணியம் + பத்மாவதி
*தனலட்சுமி + *தம்பித்துரை
*இராஜசிங்கம் + *சிவனேஸ்வரி
குணரத்தினம்

நளாயினி + சிறிகாந்தன்
துசானி
விஜித்
தமழ்ச்சுடர்
துர்ஷனா

குணாளினி + கோபாலகிருஷ்ணன்
மதுசாந்
மதிவதனன்
தமயந்தி

வாகீசன் + சாரதா
நிவேதா
சினேகா
நிதர்சனா

கேதீசன் + புனிதா
துஜிபா
லவண்ஜா
இசைமலர்

அமரர்களை குறிக்கும் - *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

நாகலிங்கம் + நல்லம்மா

ஸ்ரீறங்கநாயகி + *சின்னத்துரை
காங்கேயபூசனி + ஆறுமுகதாஸ்
*ஜெகநாதன் + டெய்சி
அன்னலட்சுமி
*சிறிகாந்தன் + செல்வநாயகி
தனலட்சுமி + *தில்லைநாதன்
சொர்னலட்சுமி + சந்திரசேகரம்
*தயாலிங்கம் + விஜிதா

ா

ரி

வாகீசன்
+
சாரதா

நிவேதா
சினேகா
நிதர்சனா

கேதீசன்
+
புனிதா

துஜிபா
லவண்ஜா
இசைமலர்

சுதாயினி
+
சத்தியசீலன்


சத்தியசுதாகரன்
*சத்தியபிரசாந்
சத்தியபிரசாந்தன்
சத்தியநிருயன்

திவாயினி
+
விஜிந்தனன்

பிறையொழி
பிரியங்கா
பகிஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org